


# வளமான பாதைக்கு நலமான பாதம்!

## திராவிட மாடல் அரசு

78

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

ஊடகம் மிகவும் சக்தி வாய்ந்தது. அதில் இப்போதெல்லாம் உண்மைச் செய்திகளின் எண்ணிக்கையைவிட பொய்ச் செய்திகள், மூடநம்பிக்கைகள், போலி மருத்துவக் குறிப்புகள் போன்றவைதான் அதிக அளவில் நிறைந்துள்ளன. உண்மை போலவே தெரியும் அவற்றைத் தவிர்த்துவிட்டு, அறிவியல்பூர்வ, அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு மக்களிடமே உள்ளது.

எனினும், மக்களுக்குத் தங்கள் மூலமாக எந்த ஓர் ஆதாரமும் இல்லாத தகவல் போய்ச் சேர்ந்துவிடக் கூடாது என்ற பொறுப்புணர்வு பல்துறை சார்ந்த பிரபலங்களுக்கு இருக்க வேண்டியது அவசியம். ஆனால், பலரும் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

இப்படித்தான் சில நாட்களுக்கு முன்பு திரைக் கலைஞர் ஒருவர் சொன்னதாக ஒரு கருத்து சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவியது. அது இதுதான்: “செருப்புப் போடுவதைத் தவிர்த்துவிட்டேன். செருப்பு இல்லாமல் நடந்து பாருங்கள். அதனுடைய அருமை உங்களுக்குப் புரியும். சீரியஸாகச் சொல்கிறேன். ஒரு மாதம் செருப்பு இல்லாமல் நடந்து பாருங்கள். அதனுடைய பயன் உங்களுக்குத் தெரியும். செமையாக இருக்கும்”.

அதைத் தொடர்ந்து மருத்துவர்கள் பலர், செருப்புப் போடாமல் நடந்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்று விளக்கியிருக்கிறார்கள். ஆனால், அந்தப் பிரபலம் தனது கருத்தைப் பின்வாங்கிக் கொண்டாரா என்பதுதான் தெரியவில்லை. காலணிகள் அணிவது ‘ஸ்டைலுக்காக’ அல்ல. நமது பாதங்களைப் பாதுகாப்பதற்காக. குறிப்பாக, நீரிழிவு நோய் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் பாதங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால், கால்களையே இழக்க நேரிடும். அப்படி ஒரு நிலையிலிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்றுதான், நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு’, ‘பாதம் பாதுகாப்போம் திட்டம்’ ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

நடப்பாண்டு நிதிநிலை அறிவிப்புக்கு ஏற்ப ‘மக்களைத் தேடி மருத்துவம்’ திட்டத்தின்படி, 8 ஆயிரம் மருத்துவர்கள், 19 ஆயிரத்து 175 மருத்துவப் பணியாளர்களுக்கு பாதப் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் என இந்தப் பயிற்சிப் பயிலரங்கம் விரிவாக்கம் செய்யப்படவிருக்கிறது.

மேலும், பாத பாதிப்புகளைக் கண்டறியும் பரிசோதனை மையங்கள் தமிழ்நாட்டில் உள்ள 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், 100 அரசு மருத்துவமனைகள் மற்றும் 21 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட உள்ளன. மேலும் 15 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் பாத அறுவை சிகிச்சைச் சேவைகள் வழங்கப்படவுள்ளன.

### நீரிழிவும் கால் இழப்பும்

மனித சமூகத்தைப் பல்வேறு வகையான நோய்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றன. அந்தவகையில், தொற்றா நோய்களில் ஒன்றான நீரிழிவு நோய், உலக மக்களை அச்சுறுத்தி வருகின்ற முதன்மையான நோய்களுள் ஒன்றாக உள்ளது. நீரிழிவு நோயாளிகளுக்கு சிறுநீரகம் உள்ளிட்ட பல்வேறு உறுப்புகளில் மட்டுமல்லாது, பாதங்களிலும் பாதிப்புகள் ஏற்படும் அபாயங்கள் உள்ளன. 2023-இல் அமெரிக்காவின் ‘நேஷனல் இன்ஸ்டிட்யூட்ஸ் ஆஃப் ஹெல்த்’ எனும் அமைப்பிலிருந்து வெளிவந்த கணக்கெடுப்பின்படி, இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் ஒரு இலட்சம் நீரிழிவு நோயாளிகள் தங்கள் கால்களை இழந்து வருவதாகத் தெரிவிக்கிறது.



சர்க்கரை அளவுகளை முறையாகக் கட்டுப்பாட்டில் வைக்காமல் இருந்தால், கால் நரம்புகள், காலில் உள்ள ரத்தநாளங்கள் ஆகியவை பலவீனமடைந்து, அதன் காரணமாக பாதங்களில் ‘அல்சர்’ ஏற்பட்டு, காயம், ரத்தக் கசிவு, கால்வீக்கம், கால்களில் துர்நாற்றம் எனப் பல விளைவுகள் ஏற்படும். அவற்றை ஆரம்பத்திலேயே கவனிக்காமல் விட்டால், ஒரு காலையோ அல்லது இரண்டு கால்களையுமோ அறுவை சிகிச்சை மூலம் அகற்ற வேண்டிய நிலை ஏற்படலாம்.

### பாதப் பராமரிப்பின் பொருளாதாரம்

நீரிழிவு நோயால் கால் இழப்பு ஏற்படாமலிருக்க, பாதங்களை நல்ல முறையில் பராமரிக்க வேண்டும். மருந்துகள், சிறிய அளவிலான அறுவை சிகிச்சைகள், காலணிகள் என பாதப் பராமரிப்புக்கு ஆகும் செலவுகள் நிறைய. இந்தியாவில் இப்படியான பாதப் பராமரிப்புக்கு ஒருவர், ஒரு மாதத்துக்குச் சுமார் ரூ.20 ஆயிரம் வரை செலவழிக்க வேண்டிய நிலை இருப்பதாக மருத்துவ ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அப்படியே செலவழித்தாலும் கூட, முழுமையாக குணமடைவதற்கு நீண்ட காலம் ஆகும். ஒருவேளை, கால்களை நீக்க வேண்டிய நிலை ஏற்பட்டால், அவரது உடலில் வேறு சில பாதிப்புகள் ஏற்பட்டு, அவரது இறப்பு விரைவிலேயே ஏற்பட்டுவிடும். இது தவிர, உடலில் ஓர் உறுப்பை இழந்த வேதனை தரும் சுமை சொல்லி மாளாது. இவ்வாறு, பாதங்களைச் சரிவர கவனிக்காததன் விளைவு, ஒரு குடும்பத்தின் மீது நிதிச்சுமையை மட்டுமல்லாமல், உறவுச் சுமை, உணர்வுச் சுமைகளையும் ஏற்றுகிறது.

### முன்னோடித் திட்டம்

இந்தக் காரணங்களால்தான், பாத பாதிப்புகளை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, சிகிச்சை அளிப்பதற்கு ‘பாதம் பாதுகாப்போம்’ என்கிற திட்டத்தினை 2022 -23 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தது நம் அரசு. அதன்படி, மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில், தஞ்சாவூர் மாவட்டத்தில் பாதப் பராமரிப்புக்கான மருத்துவ மையம் 2022 அக்டோபர் 3அன்று, ரூ.1.05 கோடி செலவில் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, தஞ்சாவூர் மாவட்டத்தில் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்கள் என்று 1,68,430 பேர் கண்டறியப்பட்டனர். இதில், 1,65,681 பேர் பாதப் பரிசோதனை செய்துகொண்டனர். அவர்களில் பாத பாதிப்பு கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 16,777 பேர். எனவே, நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் 10 சதவிகிதம் பேருக்கு பாத பாதிப்புகள் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு மாவட்டத்திலேயே இவ்வளவு எண்ணிக்கை எனில், தமிழ்நாடு முழுக்க எத்தனை நீரிழிவு நோயாளிகள் பாத பாதிப்புகளைக் கொண்டிருப்பார்கள்? அவர்களில் எத்தனை பேரால் ஆயிரக்கணக்கில் செலவழித்து தனியார் மருத்துவமனைகளில் நவீன சிகிச்சையைப் பெற முடியும்? அவர்களுக்கு உதவ, நடப்பாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, நீரிழிவு நோயினால் ஏற்படும் பாத பாதிப்புகளைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, கால் இழப்புகளைத் தடுப்பதற்கு ‘ஒருங்கிணைந்த பாதம் பாதுகாப்போம் திட்டம்’ ரூ.26.62 கோடி மதிப்பீட்டில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படவுள்ளது. அதற்கான தொடக்க விழா, 2024 ஜூலை 15 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த பாதப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான திட்டத்தை, வசதியை அரசு மருத்துவமனைகளில் தொடங்கிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான்**

இப்படியான ஒருங்கிணைந்த பாதப் பாதுகாப்பு மற்றும் பராமரிப்புக்கான திட்டத்தை, வசதியை அரசு மருத்துவமனைகளில் தொடங்கிய முதல் மாநிலம் தமிழ்நாடுதான் என்று தாராளமாகச் சொல்லலாம். ‘பாதம் தாங்கிக் கட்சிகள்’ இருக்கும் மாநிலத்தில், மக்களின் ‘பாதம் காக்கும் அரசு’, நம் ‘திராவிட மாடல் அரசு’!

**...சாதனை தொடரும்**

## இந்துக்களையும் நடுத்தெருவில் நிறுத்தும் போலி ஆன்மிகம்!

‘கன்வர் யாத்திரை’ என்கிற பெயரிலான ‘காவடி யாத்திரை’ ஒவ்வொரு ஆண்டும் உத்தரகாண்ட் மாநிலம் ஹரித்துவாரிலிருந்து புறப்படும். சுமார் 4 கோடி பக்தர்கள், ஒடிசாவின் தியோகர் நகரம் வரை கால்நடையாகச் சென்று வழிபடுவர். இந்த ஆன்மிகப் பயணம் உத்தரப் பிரதேச மாநிலத்தில் நுழைந்து செல்கையில், வழிகளில் உள்ள வர்த்தகர்களுக்கும் வியாபார வாய்ப்புகள் அதிகரிக்கும். இப்போது, உத்தரப் பிரதேச அரசு வெளியிட்டுள்ள ஓர் உத்தரவு பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

நடைப் பயண வழியில் உள்ள ஊர்களில் உள்ள கடைகளின் பெயர், அதன் உரிமையாளர்கள், பணியாளர்களின் பெயர்களை பெரிய எழுத்தில் தெரியும்படி எழுதி வைக்க வேண்டும், என உத்தரவிட்டுள்ளார் அந்த மாநில முதலமைச்சர் யோகி. இந்த அறிவிப்பின் நோக்கம், இந்து பக்தர்களுக்கு இஸ்லாமிய வர்த்தகர்கள் யாத்திரை தொடர்பான பொருட்களையோ உணவுப் பொருட்களையோ விற்பனை செய்யக் கூடாது என்பதுதான். இதையடுத்து, இஸ்லாமிய வர்த்தகர்கள் கடைகளை மூடத் தொடங்கியுள்ளதால், அந்தத் தொழிலை நம்பி இருக்கும் தொழிலாளர்கள் வேலை இழப்பைச் சந்தித்துள்ளனர்.

விற்பனை செய்யப்படும் உணவுகளில் வெங்காயம், பூண்டு சேர்க்கப்பட்டுள்ளதா என்கிற விவரங்களையும் எழுதி வைக்க வேண்டும் என்பதால், இந்த சர்ச்சையான அறிவிப்புக்கு அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமிய வர்த்தகர்களிடம், இந்துப் பணியாளர்கள் வேலை பார்த்தாலும் அவர்களுக்கும் வேலை இழப்பு என்பதுதான் இப்போதைய நிலைமை. இஸ்லாமியர்களைத் தனிமைப்படுத்துகிறேன் என்கிற பெயரில், இந்துக்களின் வாழ்வாதாரங்களையும் அழித்து, நடுத்தெருவில் நிற்க விடுகின்றனர், இந்தப் போலி ஆன்மிக அரசியல்வாதிகள்.

## ஃப்ளாஷ்பேக்



**தலைவரைச் சந்தித்த தங்கத் தருணம்!**



வெ.ரவி

1976-ஆம் ஆண்டு, மிசா காலத்திலிருந்து, கழகத்தின் வழக்கறிஞர் பிரிவில் பணியாற்றி வருகிறேன். 1987-ஆம் ஆண்டில், கழக முன்னோடி முரசொலி மாறன் அவர்கள் பரிந்துரையில், தலைமைக் கழக வழக்கறிஞராக நியமிக்கப்பட்டேன். கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும், 2014-ஆம் ஆண்டில் கழகத்தின் சொத்துப் பாதுகாப்புக் குழு வழக்கறிஞர் பிரிவுத் தலைவராகவும் தலைவர் கலைஞர் என்னை நியமித்தார். 2015-ஆம் ஆண்டு ஏப்ரலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, கழக தேர்தல் நிதி வழங்கினேன். அந்தத் தங்கமான தருணத்தில், இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உடனிருந்தார்.

**–‘வணக்கம்’ வெ.ரவி, வழக்கறிஞர்,
கழக சொத்துப் பாதுகாப்புக் குழு
வழக்கறிஞர் பிரிவுத் தலைவர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


**சட்டமன்றமும் மக்கள் மன்றமும்!**

1979-ஆம் ஆண்டு ஏப்ரலில் தமிழ்நாடு சட்டப் பேரவையிலிருந்து, எதிர்க்கட்சியாக இருந்த கழகத்தின் உறுப்பினர்கள் மூன்று பேர், சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முழுவதும் நீக்கப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்பு செய்தனர். அதேநேரத்தில், சட்டமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் மானியக் கோரிக்கைகள் குறித்து, மக்கள் மன்றத்தில் விவாதிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் பொதுக்கூட்டங்களை நடத்தினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

546

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.